Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Vol. 69 | கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றிக் கன்மலையும் யார்? சங்.18:31 | மார்ச் 2023 | No.3

எழுப்புதலின் ஜெபம் எழுப்புதலின் அக்கினியைப் பற்றச் செய்கிறது

Revival Prayer ignites revival fire

Wesley. L. Duewel (1916 - 2016)

நியூயார்க்கிலுள்ள டௌன் டவுன் என்னுமிடத்தில் டச்சு சபையில் ஒரு அமைதியும் உற்சாகமுமான 46 வயது நிரம்பிய ஒரு தொழிலதிபர் மிஷனெறியாக 1857 ஜூலை 1-ல் நியமிக்கப்பட்டார். அவரது பெயர் ஜெரெமியா லாம்ஃபையர். 1836-ல் கட்டப்பட்ட ஃபின்னியின் சபையில் 1842-ல் மனந்திரும்பியவர்.

லாம்ஃபையர் வாரந்தோறும் மத்தியான வேளையில் ஜெபக்கூடுகை ஒன்றை தொழிலதிபர்களுக்காக ஏற்படுத்த நடத்தப்பட்டார். ஜெபங்கள் சுருக்கமாக இருந்தன. அவர்கள் நியூயார்க்கிலுள்ள ஒரு ஆலயத்தின் மூன்றாவது மாடியில் கூடி ஜெபித்தனர். எப்படி அடிக்கடி நான் ஜெபிக்க வேண்டும்? என்ற கைப்பிரதியை அவர் அச்சிட்டு ஜெபக்கூடுகைகளை அறிவித்தார். இவற்றை அலுவலகங்களிலும் வேறு சில இடங்களிலும் வைத்தார். தெருப் புறத்தில் ஆலயக்கதவிலும் ஒன்றை வைப்பதுண்டு.

1857ம் ஆண்டு செப்டம்பர் 23ம் நாள் முதல் முதலாக அவர் ஜெபிக்க ஆரம்பித்தார். அவர் அரை மணி நேரம் ஜெபித்த பின்பு ஆறு பேர் வந்து சேர்ந்தனர். அடுத்த புதன் கிழமை 20 பேர் கூடினர். அக்டோபர் 7-ம் நாள் ஏறக்குறைய 40 பேர் கூடினர். கூடுகை ஆசீர்வாதமாயிருந்தபடியால் அனுதினமும் கூடி ஜெபிக்க தீர்மானித்தனர். ஒரு வாரத்துக்குப் பின்பு நூற்றுக்கு மேலானோர் கடந்து வந்தனர். அவர்களில் சிலர் இரட்சிக்கப்படாதவர்களும் தூய ஆவியால் பாவ உணர்வு பெற்றவர்களுமாவர்.

ஒரு மாதத்திற்குள்ளாக மத்தியான ஜெபத்தில் கூடினவர்கள் தங்கள் சபைகளில் காலை ஜெபத்தை ஆரம்பித்தனர். இவற்றில் பல இடங்களில் இடநெருக்கடி ஏற்பட்டது. இக்கூடுகைகளில் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பு, சக கிறிஸ்தவர்கள் மேலுள்ள அன்பு, ஜெபத்தின் தாகம், சாட்சி கூறும் ஆவல் இவற்றால் நிரப்பப்பட்டிருந்தனர். அவர்கள் ஆச்சரியமான தேவ பிரசன்னத்தை உணர்ந்திருந்தனர். அவர்கள் குறிப்பிட்ட மக்களுக்காக ஜெபித்து, பதிலை எதிர்பார்த்ததோடு பதிலைப் பெறவும் செய்தனர்.

செய்தித் தாள்கள் இந்த விசேஷித்த ஜெபக்கூடுகைகளை அறிவித்தன, மூன்று மாதங்களுக்குள் அமெரிக்கா முழுவதும் இது பரவியது. ஆயிரக்கணக்கானவர்கள் இக்கூடுகைகளிலும் தங்கள் இல்லங்களிலும் ஜெபிக்க ஆரம்பித்தனர். சுவிசேஷ பிரதிகள் ஜெபத்தோடு பெறப்பட்டு, தேவன் தங்கள் மனதில் பேசினவர்களுக்கு அளிக்கப்பட்டது.

அச்சபையின் அறைகள் நிரம்பியதால் பலர் வேறு இடங்களுக்குச் சென்றனர். பெப்ரவரி மாதமே அருகில் ஒரு மெதடிஸ்டு சபை ஆரம்பிக்கப்பட்டு அதுவும் நிரம்பி வழிந்தது. மார்ச் 19-ல் ஒரு அரங்கம் திறக்கப்பட்டு ஜெபம் ஆரம்பிக்கும் முன்னதாகவே இட நெருக்கடியால் அநேகர் வெளியே நின்றனர். மார்ச் இறுதிக்குள் 6000 மக்களுக்கு மேலாக அனுதினமும் நியூயார்க் பட்டணத்தில் கூடி ஜெபித்தனர். அனேக சபைகளில் மாலை ஜெபங்கள் ஆரம்பிக்கப்பட்டன. விரைவில் 150 இணைந்த ஜெபக்கூடுகைகள் ஒவ்வொரு நாளும் நடத்தப்பட்டன. பெப்ரவரியில் பிலடெல்பியாவில் ஜெபம் ஆரம்பிக்கப்பட்டு, அறைகள் நிரம்பியதால் பொது அரங்கங்களிலும், தீயணைப்பு நிலையங்களிலும், வீடுகளிலும், கூடாரங்களிலும் நடத்தப்பட்டன. பட்டணமே ஜெப ஆவியால் நிரப்பப்பட்டது.

ஜெபக்கூடுகையின் வாஞ்சை

இதே வேளையில் அமெரிக்காவின் பல பகுதிகளில் நண்பகல் ஜெபக் கூடுகைகள் துளிர்த்தன. ஏப்ரல் மாத முடிவில் ஜெப வாஞ்சை தேசம் முழுவதிலும் பரவி விட்டது, தூய ஆவியானவரின் தெய்வீகக் கிரியையும் தேவ ஜனத்தின் கீழ்ப்படிதலும் வெளிப்படுத்தப்பட்டன.

அமெரிக்கா விசுவாசமும் ஜெபமும் நிறைந்த ஒரு புதிய காலக் கட்டத்துக்குள் நுழைந்தது. அனைத்து வகையான மக்களும் ஜெபித்து விசுவாசித்து, ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொண்டனர். பிராங்க்லின் பீர்ஸ் என்ற தேசத்தின் பிரஸிடென்றும் நண்பகல் ஜெபக்கூடுகைகளில் கலந்து கொண்டார். வல்லமையான பிரசங்கத்தினாலல்ல, உத்தம, வல்லமையான, விடாப்பிடியான ஜெபத்தால் இந்த எழுப்புதல் ஏற்பட்டது.

மக்கள் ஜெபிக்க இடம் தேடினார்கள். பாவிகள் ஜெபிக்க வந்து ஜெபத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவில் மகிழ்ந்தார்கள். மனந்திரும்பாதவர்களின் பெயர்கள் கூறப்பட்டு ஜெபிக்கப்படும். ஓரிரு நாட்களில் அவர்களின் சாட்சி வெளிவரும். சில பட்டணங்களில் அனைவருமே இரட்சிக்கப்பட்டுவிட்டனர்.

சபை ஏதோ ஜெபத்தின் வல்லமையைக் கண்டு பிடித்து விட்டது போல ஜெபம் தேசத்தையே நிரப்பி விட்டது. பல சபைப் பிரிவினரும் ஜெபத்தின் புதிய தாக்கத்தை அனுபவித்தனர். பிரிஸ்பிட்டீரியன் சபையில் 50,000 மக்களும், மெதடிஸ்டு சபைகளில் 8000 மக்களும் மனந்திரும்பியதாகப் பத்திரிகைகள் அறிவித்தன. பாப்திஸ்து சபைகளில் ஒரே மாதத்தில் 17000 பேர் மனந்திரும்பியுள்ளனர்.

விழிப்புணர்வு பரவுகிறது

1857-59 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய விழிப்புணர்வு நகரங்களிலிருந்து பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் பரவியது. இது கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் எழுப்புதலை ஏற்படுத்தியது. இரண்டு ஆண்டுகளாக 10,000க்கும் அதிகமான பேர் ஒவ்வொரு வாரமும் சபைகளில் சேர்ந்தனர்.

புதிய இங்கிலாந்தின் பட்டணங்களில் மனந்திரும்பாதவர்களே இல்லை. சபைகளில் அனுதின ஜெபங்கள் நடைபெற்றன. ஐக்கிய நாடுகளில் வாழ்ந்த 30 மில்லியன் மக்களில் 2 மில்லியன் மக்கள் இந்த எழுப்புதலால் ஆதாயம் பண்ணப்பட்டனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாசகர் கடிதம்

07/01/2023

கர்த்தருக்குள் அன்பான ஐயாவுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். ஐயா 1 வருடமாக உங்களிடம் தொடர்பு கொள்ள முடியாமல் கடந்த வருடம் எனக்கு அடிபட்டு வலது தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்த்து அறுவைச் சிகிச்சை நடந்தது. எனக்கு 93 வயது ஆகிறது. கடவுள் நடக்கும்படி கிருபை பாராட்டினார். எனக்கு வயது காரணமாக பெலவீனப்பட்டு இருக்கிறேன். வலி அதிகம் இல்லை. வலி குறையவும் நடக்க சக்தி கொடுக்கவும் கர்த்தரிடத்தில் எனக்காக ஜெபியுங்கள். என்னால் கடிதம் எழுத கூட முடியவில்லை. விரல்களால் மடித்து எழுத முடியவில்லை.

நீங்கள் அனுப்பிய காலண்டர் கிடைத்தது. உங்களுக்கு நன்றி. புத்தாண்டு வாழ்த்துக்கள். அதோடு தொடர்ந்து ஊழியத்திற்கு பணம் அனுப்புவேன். நன்றி இப்படிக்கு, E.P.N

22/01/2023

பிரியமுள்ள சகோதரர் அவர்களுக்கு எழுதுவது தங்கள் பத்திரிகை மாதந்தோறும் வரும். தங்கள் பத்திரிகை நீதியை குறித்தும், பாவத்தை குறித்தும் எழுதுவது மிகவும் பிரயோஜனமாய் இருக்கும். தங்கள் பத்திரிகை ஊழியத்திற்கு சிறு தொகை அனுப்பி உள்ளோம் பெற்றுக் கொள்ளவும். கணவர், மகன், மருமகள், பேரக்குழந்தைகளுக்காக ஜெபித்துக் கொள்ளவும். தங்கள் ஊழியத்திற்காக எங்கள் ஜெபத்தில் வேண்டிக் கொள்கிறோம்.

A.M., சென்னை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2023 மார்ச் மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும் துதிக்கிறேன். "**பிரியமானவனே, பிரியமானவளே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும் படி வேண்டுகிறேன்**" 3 யோவான் 2.

கடந்த 5 ஆண்டுகளாக வருகையின் தூதன் பத்திரிகைக்கு தபால் சலுகை இல்லாதபடியால் **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிகை பணியை தாங்குங்கள் என்று எழுதினேன். **மாதந்தோறும்** பத்திரிகைக்கான செய்திகள் ஆயத்தம் பண்ண வேண்டும், அச்சிட வேண்டும், அனுப்ப வேண்டும் அதோடு **வருகையின் தூதன் ஊழியத்தைச் செய்கிறவர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்க வேண்டும்** என்றும் எழுதினேன்; ஆனால் **மாதந்தோறும்** பத்திரிகை பணியை தாங்க புதிதாக ஒருவர் கூட முன்வரவில்லை.

நவம்பர் 2021, டிசம்பர் 2021, ஜனவரி 2022 ஆகிய **3** மாதங்களில் 2-ம் பக்கம் ஆசிரியர் கடிதத்தின் மேல் பகுதியில் இவ்வாறு அச்சிட்டிருந்தேன்:

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் பக்கம் ஆசிரியர் கடிதத்தில் இவ்வாறு அச்சிட்டிருந்தேன்:

2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

தபால் சலுகையை இழந்ததினால் ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவ மாத பத்திரிகையை **மாதந்தோறும்** காணிக்கை அனுப்புகிறவர்களுக்கு மட்டும் அனுப்புகிறார்கள். சில பத்திரிகைகள் **இரண்டு மாதத்திற்கு** ஒரு முறை அச்சிடப்படுகிறது. கொரோனா காலத்திற்குப்பின் வருகையின் தூதன் ஆங்கிலம் உட்பட பிறமொழிகள் **இரண்டு மாதத்திற்கு** ஒரு முறை வெளியிடப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் வருடத்திற்கு ஒரு முறை காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள் குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள் என்ற அறிவிப்பை **மாதந்தோறும்** வெளியிட்டு வந்தேன்

ஆயினும் உங்களில் அனேகர் வழக்கம் போல வருடத்திற்கு ஒரு முறை ரூபாய் 50, 100, 150, 200 என்று அனுப்பியிருக்கிறீர்கள். **உங்களுக்கு ஏப்ரல் மாதம் வரை பத்திரிகை அனுப்பப்படும்.**

"**வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித் தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு.**

உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" நீதி. 11:24, 25.

ஜனவரி மாதம் ஒரு சகோதரி, ஒரே நாளில் இரண்டு மணியாடர்கள் ரூபாய் 500, 500 என்று அனுப்பியிருந்தார்கள். ஒரு மணியாடர் VARUKAYIN THOOTHAN என்றும், இன்னொன்றை VARUKAYIN THOOTHAN FASTING PRAYER என்றும் அனுப்பியிருந்தார்கள். சில தேவ பிள்ளைகள் **மாதந்தோறும்** உபவாச ஊழியத்தை தங்கள் காணிக்கைகளினால் தாங்குகிறார்கள்.

அன்புள்ள இயேசப்பா சொல்லுவதைக் கேளுங்கள்:

"**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்;**

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்". மத். 6:19-21

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

அறிவிப்புகள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008** Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

இந்த எழுப்புதலில் எந்த இயக்கத்தின் ஒழுங்குகளோ, எழுப்புத லாளர்களோ இல்லை. ஜெபக்கூடுகை களின் மத்தியில் எந்த இணைப்பும் இருக்கவில்லை. ஃபின்னியைத் தவிர எந்த எழுப்புதல் ஊழியக்காரரும் புதிய இங்கிலாந்து பகுதியில் இருக்கவில்லை. அது மனிதரால் திட்டமிடப்படவோ வழி நடத்தப்படவோ இல்லை.

இது சாதாரண மக்களின் இயக்கம். அனேக போதகர்கள் அத்தி யட்சர்கள் இதிலே கலந்து கொண்டாலும் எவரும் இதில் தலைமை பொறுப்பினை ஏற்கவில்லை. இது ஆவியால் தூண்டப் பட்டு, வழி நடத்தப்பட்ட ஜெபம். மக்கள் பார்க்கவோ, பார்க்கப்படவோ வரவில்லை, ஜெபிப்பதற்காகவே வந்தனர்.

வானங்கள் திறக்கப்பட்டன

The Heavens were opened

James A. Steward (1910-1975)

வேல்ஸ் எழுப்புதலுக்குக் காரண மானவர் ஈவான் ராபர்ட்ஸ் அல்ல, தூய ஆவியானவர் மட்டுமே. 1904-ல் ஏற்பட்ட எழுப்புதலில் ஈவான் ராபர்ட்ஸுக்கு ஒரு முக்கிய பங்கு இருந்தாலும் இந்தப் பெரிய விழிப் புணர்வின் ஆரம்பம் வேல்ஸில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே பல பகுதிகளில் ஆரம்பித்து விட்டது. 1904-ன் கடைசிப் பகுதியில் குறைந்தது நூறு போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் சாதாரண மக்கள் பயன்படுத்தப் பட்டனர்.

ஆவியானவரின் பணி தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிக் கொண்டிருந்தவேளை ஈவான் ராபர்ட்ஸின் ஊழியம் ஒரு சிறுபகுதியில் நிறைவேறிக் கொண்டிருந்தது. தேவ அக்கினி அவர் சந்திக்காத பட்டணங்களிலும், கிராமங் களிலும் பற்றி எரிந்தது. அவர் சந்தித்த இடங்களில் அக்கினி ஏற்கெனவே எரிந்து கொண்டிருந்தது. அவரது சந்திப்பு அக்கினியை வளர மட்டும் செய்தது.

உத்தம எழுப்புதலின் குணாதிசயங்கள்

தூய ஆவியானவரின் உத்தம அசைவாடுதலின் ஒரு முக்கிய தன்மை அவர் மனித நபரத்துவத்தில் சார்வ தில்லை. **"கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்"** (நியா.7:18) என்பது போல மனித சார்பு இருக்கலாம். தேவன் உடைந்த, சுத்த மான பாத்திரங்களைத் தேடி அவரது பணியை நடப்பிக்கிறார். ஈவான் ராபர்ட்ஸ் இத்தகைய ஒரு பாத்திரமாயிருந்தார்.

இன்னொரு முக்கியமான தன்மை என்னவெனில் எழுப்புதல் பணத்தையோ, ஸ்தாபனங்களையோ, பிரச்சாரத்தையோ சார்ந்ததல்ல. அப்போது பாடல் புத்தகங்களோ, பாடற் குழு தலைவர்களோ, பாடற் குழுக்களோ, சபைக் குழுவினரோ, மிகப் பெரிய பிரசங்கிமாரோ, காணிக்கைகளோ இருக்கவில்லை. "எழுப்புதல் தனக்குத் தேவையான பொருளாதாரத்தையும், பிரச்சாரத்தையும் பார்த்துக் கொள்வ தால், எந்தச் செலவுகளுமில்லை" என்று லார்டு பொன்றி பிரிட் குறிப்பிட்டுள்ளார்.

இன்னுமாக உத்தம எழுப்பு தலில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே மையமாயிருக்கிறார். "அவர் வீட்டிலிருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்" மாற்.2:1. ஊழியஞ் செய்கிறவர்கள் மையமாகக் கருதப்பட்டால் அந்தப் பணி தேவ பணியல்ல அது மாம்சத்துக்குரியது.

ஒரு சபையிலோ, பட்டணத் திலோ, ஒரு தேசத்திலோ எழுப்புதல் வல்லமையாக ஏற்படும்போது தாமாகவே அவர் செயல்படுகிறார்.

வேல்ஸ் எழுப்புதலின் அடையாளங்கள்

அது வாலிபரின் எழுப்புதல்:–

ஈவான் ராபர்ட்ஸும் அப்போது இருபத்தாறு வயது மட்டுமே நிரம்பிய வராயிருந்தார். ஆயிரக்கணக்கான வாலிபர்கள் பல இடங்களில் சென்று சாட்சியளித்தார்கள். சிறுபிள்ளைகளும் கூட கூடி ஜெபித்து தேவனை மகிமைப் படுத்தி னார்கள். சிற்றாலயங்களெல்லாம் வாலிபர்களால் நிரம்பி வழிந்தது.

அது பாடல்களின் கெம்பீர சத்தம் நிறைந்த எழுப்புதலாயிருந்தது:–

பாடற் கருவிகளின் ஒவ்வொரு நரம்பும் தேவ ஆவியால் உயிரூட்டம் பெற்றிருந்தது. அந்த எழுப்புதல்கால தலைவர்களில் ஒருவரான **R.B. Jones** "அதைக் குறித்து கேள்விப்படுமுன் அது மனோபாவனை செய்யக் கூடாததும், கேட்டபின் விவரிக்க முடியாததுமா யிருந்தது" என்றார். அங்கு பாடற் புத்தகங்களில்லை. யாரும் பாடலை அறிவிக்கவுமில்லை. யாரோ ஒருவர் தொடங்க அனைவரும் பாடித் துதித்தனர்.

ஒரே விதமான தூண்டுதலால் பாடல் ஆரம்பிக்கப்பட்டு, ஏதோ ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது போல ஒரு தலைவருடன் இணைந்து பாடுவது போல எல்லாரும் பாடினர். இதைப் போல நான் எங்கும் கண்டதில்லை. ஏனெனில் சுமார் ஆயிரத்துக்கும் அதிக மானோர் ஒரே நபர் போல் இணைந்து பாடினர்.

அவர்களது பாடலின் இசைவு பரிபூரணமாயிருந்தபடியால் அது சிறந்த சாட்சியாகவும் தூய ஆவியானவரால் உருவாக்கப்பட்ட ஒற்றுமையாகவு மிருந்தது.

அந்த எழுப்புதல் ஜெப எழுப்புதலாயிருந்தது:–

துதியின் சத்தத்தோடு ஜெபம் கலந்திருந்தது. அவர்களது அற்புதமான ஜெபம் பரலோகத்தைக் கிழிப்பதாகவும் உடனடி பதிலைப் பெற்றுக் கொள்வ தாகவுமிருந்தது. மன்றாட்டின் ஆவி வல்லமையாகப் பொழியப்பட்ட படியால் முழுச் சபையும் ஒன்றுபோல் பல மணி நேரங்கள் ஜெபித்தனர்.

வாலிபரும், கல்வியறிவற்றவர் களும் அபிஷேகத்தால் நிரம்பி ஞானமாக ஜெபிப்பதை அன்னியர் கேட்டு ஆச்சரிய மடைந்ததோடு, தேவ ஆவியால் அவர் களும் கிருபாசனத்திற்கு நேராக நடத்தப் பட்டனர். ஆராதனையும், வணக்கமும் எல்லையற்றிருந்தன. துதியும் விண்ணப் பமும் இணைந்து பதிலைப் பெற்றன. இரட்சிக்கப்படாத அன்பானவர்கள் இரட்சிப்பைப் பெற்றனர்.

அந்த எழுப்புதல் ஆத்தும ஆதாயத்திற்கு ஏதுவா யிருந்தது:–

முன்பு சில பிரசங்கிகளும் சபை அங்கத்தினரும் மட்டுமே ஆண்டவ ராகிய இயேசுவின் இரட்சிப்பின் கிருபையை சாட்சியாய் அறிவித்தனர். இப்போது, வேல்ஸிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் இழந்து போன ஆத்துமாக்களுக்கான ஒரு கடும் வேதனை ஏற்பட்டது !

உத்தம கிறிஸ்தவர்கள் தங்கள் மகிமையான இரட்சகரைக் குறித்து நிலக்கரி சுரங்கத்திலும், வண்டிகளிலும், அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் சாட்சியாக அறிவிப்பது எளிதாகி விட்டது. தனிப்பட்ட சாட்சிகள் மூலம் சாதாரண சம்பாஷணைகளிலும் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார்.

ஒரு புதிய நாள் விடிந்து விட்டது

ஜனங்கள் தூங்கவோ, ஜெபக் கூடுகைகளை விட்டு விலகவோ முடிய வில்லை. ஆராதனைகள் காலை இரண்டு மூன்று மணிவரை நீடித்தன. பின்பு மக்கள் தெருக்களில் தேவனைப் புகழ்ந்து பாடிக் கொண்டே சென்றனர்.

தேவ பிரசன்னத்தால் மலைகள் உருகி வானங்கள் திறக்கப்பட்டன. வேல்ஸ் திருச்சபை அற்புதமான ஆண்டவரைப் பற்றிய ஒரு புதிய மகத்துவ காட்சியைப் பெற்றுக் கொண்டது. எழுப்புதலின் அன்புப் பாடல் என்ற கீழ்க்காணும் பல்லவி இதை வெளிப்படுத்துகிறது.

அற்புதமான அன்பு, அளவில்லாத இரக்கம்!
பிரளயத்தில் கடலைப் போல் பெரியது,
ஜீவனின் இளவரசராகிய இயேசு மரிக்கிறார்.
அவரது இரத்தத்தில் நமக்கு ஜீவனுண்டு!
ஆ! எந்த இருதயம் அவரை எப்போது
மறக்கக்கூடும் ?
யார் அவரது புகழ் பாடுவதை நிறுத்த முடியும்?
அற்புதமான அன்பு! எப்போதும் காணப்படும்.
பரலோகம் சங்கீதத்தால் கெம்பீரிக்கும்.
எழுப்புதலுக்கான ஆயத்தம்!

எழுப்புதலுக்கு முன்னால் வேல்ஸ் இருளுக்குள் இருந்தது. மக்களிடையே நடனங்களும், புறா பறக்க விடுதல், கோழிச் சண்டை, சூதாட்டம் போன்றவை தலை தூக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)
நின்றன. ஏறக்குறைய 40,000 விசுவாசிகள் ஒருவரையொருவர் அறியாதிருந்தும் தேசத்தின் பல பகுதிகளிலிருந்து கர்த்தருக்காகக் காத்திருந்தனர்.

தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களில் ஒருவர் வயதில் குறைந்த ஈவான் ராபர்ட்ஸ். அவர் தேவனால் மிக அதிகமாக பயன்படுத்தப்பட்டாரோ இல்லையோ, ஆனால் இந்த எழுப்புதலில் ஈடுபட்ட பிரசங்கிகளில் அவர் தலை சிறந்தவர்.

அவர் 1878-ல் ஜூன் 8-ஆம் நாள் சாதாரண குடும்பத்தில் 'ஐஸ்லாண்டு வீடு' என்ற இல்லத்தில் Loughor என்ற சிறுபட்டணத்தில் பிறந்தார். மிகச் சிறிய வயதிலேயே சுரங்கத்தில் பணி செய்தார். பிரசங்கிக்க வேண்டுமென்ற பாரம் அவருக்குள் இருந்தது. அவரது கல்வி குறைவாயிருந்தும் அவரது போதகரும் பிறரும் அவரைப் பிரசங்கிக்க உற்சாகப்படுத்தினர்.

ஈவான் மோரியா சிற்றாலயத்திற்குச் செல்லுவது வழக்கம். அங்கு வில்லியம் டேவீஸ் என்ற ஒரு டீக்கன் இருந்தார். அவர், தூய ஆவியானவர் வந்து இறங்கப் போகிற கூடுகைகளை ஈவான் தவற விட்டு விடக்கூடாது என எச்சரித்தார்.

திங்கள் மாலை நேரங்களில் மோரியாவிலும், செவ்வாய் பிஸ்காவிலும், புதன் மீண்டும் மோரியாவிலும், வியாழன் மற்றும் வெள்ளி வேறு இடங்களிலும், ஜெபக் கூடுகைகளிலும், வேத பாட வகுப்புகளிலும் அவர் கலந்து கொண்டார். தூய ஆவியானவரின் சந்திப்புக்காக அவர் பதின்மூன்று ஆண்டுகள் ஜெபித்திருக்கிறார்.

1904 துளிர் விடுங்காலம் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பாக தான் மறுரூபமலையிலிருப்பதாக அவர் உணர்ந்தார். தமது சொந்த இல்லத்திலும், கிராமத்திலும் அவரது பரம தந்தை அவருக்குத் தம்மை அற்புதமும் அதிசயமுமான விதமாக வெளிப்படுத்திய போது அவரது ஆத்துமா தெய்வீக ஆச்சரியத்தால் நிரம்பியது. நியூகாஸில் எம்லின் இலக்கணப் பள்ளியில் சேரும் காலம் சமீபித்த போது இந்த ஆசீர்வாதமான காலங்களை இழந்து விடுவோமோ என்ற பயம் அவருக்கு ஏற்பட்டது.

இப்பள்ளியிலிருந்து சுமார் எட்டு மைல்களுக்கு அப்பால் **Blaenanerch** என்ற இடத்தில் ஒரு எழுப்புதல் கூடுகை நடைபெற்றது. அங்கிருந்த சுவிசேஷகர் சேத் ஜாஷ்வா. ஈவான்ஸ் இன்னும் 19 வாலிபர்களுடனும் நெருங்கிய நண்பன் சிட்னி ஈவான்ஸுடனும் அங்கு சென்றார்.

கர்த்தர் அவர்கள் இருதயத்தில் கிரியை செய்தபடியால் அதிகாலையிலேயே பாடிக் கொண்டே அவர்கள் பிரயாணம் செய்தனர். 'அருள் மாரி வருகிறது - நான் தூய ஆவியானவரின் வல்லமையினைப் பெறுகிறேன்' என்பது அவர்கள் பாடல். ஜாஷ்வா நடத்திக் கொண்டிருந்த அந்தக் கூடுகையை அடைந்த அவர்கள் ஜெபித்தபோது ஈவான்ஸ் கண்ணீர் விட்டுக் கதறினார்.

'ஆண்டவரே எங்களை பணியச் செய்யும்'

சுவிசேஷகர் '**எங்களைப் பணியச் செய்யும்**' என்று கூறிய போது தேவ ஆவியானவர் அவரது காதுகளில் '**இதுவே உனக்குத் தேவை**' என மெதுவாகக் கூறினார்.

9 மணி கூடுகையில் மன்றாட்டின் ஆவி வல்லமையாக இறங்கியது. அவர் ஜெபித்த அனுபவத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

நான் எனக்கு முன்பாக இருந்த இருக்கையில் என் கரங்களை வைத்து முழங்காற்படியிட்டேன். 'ஆண்டவரே என்னைப் பணியச் செய்யும்' எனக் கதறினேன். தேவன் தமது அன்பை எனது தன்மையைப் பாராது எனக்குள் அனுப்புவதே இதன் நோக்கம்.

தூய ஆவியானவர் கல்வாரி அன்பால் என்னை நிரப்பினார். எனவே எழுப்புதலின் முக்கிய நோக்கம் 'கல்வாரி அன்பு' என்றால் மிகையல்ல. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்". ரோமர்.5:8 வியர்வை என் முகத்தில் வழிந்தோடியது. கண்ணீர், இரத்தம் வடிகிறதோ என சந்தேகிக்கும் அளவில் வெளியேறியது. இதே வேளையில் மக்கள் பாடிக் கொண்டேயிருந்தனர். ஆத்தும பாரம் என்மேல் இறங்கியது.

எழுப்புதலின் விளைவுகள்

எழுப்புதல் ஏற்பட்ட பின்பு குடிகாரர்களின் கைது ஏற்படவில்லை என்று தினசரி பத்திரிகை குறிப்பிட்டது. வேலை செய்தவர்களின் கூலி வீணாகச் செலவு பண்ணப்படாமல் குடும்பங்களில் சந்தோஷமாகச் செலவிடப் பட்டது. பிறருடைய கடன்களைத் தீர்த்துச் சரிக்கட்டும் நிலை ஏற்பட்டது.

கேளிக்கை ஸ்தலங்களும் மதுக் கடைகளும் மூடப்பட்டன. அரசியல் கூடுகைகள் நிறுத்தப்பட்டன. யாரும் அவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வில்லை.

மிக முக்கியமாக சபையின் தவறான போங்குகள் தகர்க்கப்பட்டன. மனிதரால் ஏற்படுத்தப்பட்ட மார்க்க பேதங்கள் அகற்றப்பட்டு அனைவரும் இணைந்து தேவனை ஆராதித்தனர். ஸ்தல கிறிஸ்தவர்களுக்கிடையிலிருந்த சண்டைகள் தீர்க்கப்பட்டன. அவர்கள் இணைந்து ஆண்டவரை ஆராதித்தனர்.

இரட்சிக்கப்பட்டவர்களுக் குள்ளும் இரட்சிக்கப்படாதவர்களுக்கும் பாவ உணர்வு ஏற்பட்டு, உடைந்த உள்ளத்தோடு கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்பாக வந்து உள்ளம் உருகி நின்றனர்.

இரட்சிக்கப்பட்டவர்களும், இரட்சிக்கப்படாதவர்களும் பாவ அறிக்கை செய்தனர். கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்பாக அவர்கள் உருகி அழுது கதறினர்.

ஏற்பட்ட எழுப்புதலும் அதின் தாக்கமும் காட்டுத் தீ போல பரவியது. அங்குமிங்குமாக எதிர்பாராத இடங்களிலெல்லாம் மக்கள் ஆச்சரியப்படத் தக்கதாய் பரவியது. இதனை சந்தித்த ஊழியக்காரரும் விசுவாசிகளும் எரிகிற முட்செடியின் காட்சிதனைக் கண்டு திரும்பிச் சென்று அவரவர் சபை, ஊழியக்களம், பட்டணம் ஆகியவற்றில் நெருப்பைப் பற்றச் செய்தனர். உலகெங்குமுள்ள மக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்.

சபையைப் பணியச் செய்யும்

ஈவான் ராபர்ட்ஸின் முத்திரை வாக்கியம் சபையை பணியச் செய்து உலகை மீட்பதாகும். **(bend the Church, save the World)** இதுவே உத்தம எழுப்புதலின் இரகசியம். கிறிஸ்தவர்கள் தங்களைத் தாழ்த்தி, தேவனோடு ஒப்புரவாகினால் தேவ ஆவியானவர் இரட்சிக்கப்படாத மக்களில் தமது வல்லமையை அனுப்பி அவர்களை இரட்சிப்பார்.

மாய்மாலம் வேண்டாம். தேவ ஆவியானவர் வெளிப்படுத்தப்பட கிறிஸ்தவன் தேவ சித்தத்திற்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்திருப்பது அவசியம். தூய ஆவியானவர் தெய்வீக நபராக உணரப்பட்டு கனப்படுத்தப்பட வேண்டும். **தேவனே! அக்கினியை இன்னொரு முறை கூட அனுப்புவீராக.**

ஈவான் ராபர்ட்ஸின் ஜெபம்

ஆண்டவராகிய இயேசுவே, தூய ஆவியின் ஒத்தாசையால் சிலுவையை நான் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். எங்கள் அனைவரையும் இயேசுவின் இரத்தத்தின் கீழ் வையும். அவரது இரத்தம் எங்கள் கடந்த காலங்கள் மீதும் இம்மட்டும் இருப்பதாக. உமது இரத்தத்திற்காகத் உம்மைத் துதிக்கிறோம்.

இயேசுவின் நாமத்தில் சாத்தானை இப்போதே கட்டுவீராக. நாங்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் சுட்டிக் காண்பிக்கிறோம். அது எங்கள் சிலுவை, நாங்கள் அதின் முற்றுகையை எடுத்துக் கொள்கிறோம். இயேசுவின் நாமத்தால் சிலுவையை வெளிப்படுத்தும். வானங்களைத் திறந்து இப்போதே எங்கள் மேல் இறங்கும்.

எங்கள் இருதயங்களைத் திறப்பீராக. கல்வாரிக் காட்சியால் எங்கள் இதயங்கள் உடையட்டும். ஆண்டவரே, இப்பொழுதே இறங்கி வந்து எங்கள் இதயங்களைத் திறந்து எங்களுக்காக இரத்தம் சிந்திய இருதயத்தை எங்களுக்கு அளியும். உமக்காக நாங்கள் பைத்தியமாகட்டும்!

எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் உமக்குச் சொந்தமாகட்டும். நீர் எங்களைக் கிரயத்துக்குக் கொண்டீர். இயேசுவுக்காக உலகத்தை ஜெயிக்கும் சிலுவையை எங்களுக்கு வெளிப்படுத்தும். எங்களை இயேசுவின் இரத்தத்தின் கீழ் வைத்துக் கொள்ளும்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

மக்கள் எங்களை என்ன சொல்லுகிறார்கள் என்று நாங்கள் சிந்திக்க வேண்டாம். ஆண்டவராகிய இயேசுவே பேசும். உமது வார்த்தைகள் 'திராட்ச ரசம்.' அன்பான இயேசுவே சிலுவையையும் அதின் மகிமையையும் வெளிப்படுத்தும். அனைத்து இருதயங்களிலும் ஆட்சி செய்வீராக.

எங்களுக்காக மரிக்கும் இரட்கரை காண எங்களுக்கு உதவி செய்யும். அந்தகார சக்திகளை மேற் கொள்ளு k ç > åVº ï ^ ÃVì Âï â | D! ஆண்டவரே, உமது குமாரனுக்காக வெற்றியைக் கேட்கிறேன். அவர் வெற்றியைப் பெற தகுதியானவர்.

நீர் சகல வல்லமையும் பொருந்தியவர். எனவே வெற்றி உம்முடையது! நாங்கள் சகல மகிமையையும் உமக்கே செலுத்துகிறோம். உம்மைத் தவிர மகிமைக்குப் பாத்திரர் எவருமில்லை.

இக்கூடுகையில் உமது குமாரனை மகிமைப்படுத்தும்! தூய ஆவியானவரே, எங்கள் மூலமாகவும், எங்களுக்குள்ளும் தமது பணியை நிறைவேற்றும். உமது வார்த்தை வல்லமையாய் வெளிப்படட்டும். உமது நாமத்தில் கேட்கிறேன். ஆமென்.

எழுப்புதல்களும் தேவன் கிரியை செய்யும் விதமும்

The revival and the way God works

Horatius Bonar (1808-1889)

உலகம் மரணத் தூக்கத்திலிருக்கிறது. பல தலைமுறைகளாக ஆழ்ந்த தூக்கத்திலோ, எளிய தூக்கத்திலோ கல்லறைக்குள் கடைசி எக்காளம் தொனிக்கும் வரை இருந்து கொண்டிருக்கிறது.

தேவன் எச்சரிக்காமலிருக்கவில்லை. அவரது சத்தம் மந்தமான காதுகளில் எட்டி, குளிர்ந்த இதயங்களைத் தூண்டுகிறது. அவர் அனேக முறை பேசினாலும் இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார். உலகம் அதற்குச் செவி கொடுக்கவில்லை.

எனினும் இந்தத் தூக்கம் உலகம் சார்ந்ததல்ல. ஏதோ சிலர் விழித்திருக்கவே செய்தனர். உலகம் நடுநிசிக்குள் இருந்த போது வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளும் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களுக்கு தேவனுடைய குரல் வெளிப்பட்டு அவர்கள் பெலனடைந்து எழுந்து நடந்து தூங்குகிறவர்கள் மத்தியில் விழிப்புள்ளவர்களாகவும், மரித்தவர்கள் மத்தியில் ஜீவனுள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

தேவனுடைய குரல் ஒருவரையல்ல ஆயிரக்கணக்கானோரை கிராமங்களிலும் மாவட்டங்களிலுமிருந்து எழுப்பி புது ஜீவனை அளிக்கும் போது எத்தனை சந்தோஷமாயிருக்கும்!

சபையின் சரித்திரம் இத்தகைய பெரிய சிறிய எழுப்புதல்கள் அடங்கியது. அது அப்போஸ்தலர் நடபடிகளில் காணும் சபைச் சரித்திரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை உள்ளடக்கியது.

பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இன்று வரை தேவ ஆவியானவரின் பொழிவைக் குறித்த விபரங்களை விசுவாசிகள் கவனித்து வருகின்றனர். தேவன் எவ்வாறு செயல்படுகிறார் எவர்களை அவர் பயன்படுத்துகிறார் என்பது உற்சாகத்தையும் அளிக்கக் கூடியது. நமது சொந்தக் குறைவுகளை சுட்டிக் காண்பிக்கவும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை தெரிவிக்கவும் எழுப்புதல் தேவை.

தேவனுடைய குறிப்பிடத்தக்க செயல்பாடு

ஜோனதான் எட்வர்ட்ஸ் என்பவரின் ஒரு மேற்கோளை இங்கு குறிப்பிடுகிறேன்:

இந்த குறிப்பிட்ட நாளில் மக்கள் மேல் ஆழமான கரிசனையின் ஆவி எப்படி இறங்குகிறது என்பதைக் காண முடிகிறது. சிலர் வீட்டில், சிலர் வழியில், சிலர் காட்டில், இன்னும் சிலர் வயல் வெளியில் இருக்கிறார்கள். சிலர் பேசிக் கொண்டோ அல்லது இளைப்பாறிக் கொண்டோ இருக்கிறார்கள். சிலர் பிள்ளைகளாக அல்லது வாலிபராகவோ, வயோதிபராகவோ இருக்கிறார்கள். திடீரென மறுஉலகத்தைக் குறித்தும், நித்தியமானவைகளைக் குறித்தும் உறுதியான அழுத்தங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் இத்தகைய காரியங்கள் தேவ வசனத்தையோ அல்லது ஆவிக்குரிய காரியங்களையோ மனதில் சிந்திக்கும் போது தான் ஏற்படுகின்றன.

மார்க்கம் மற்றும் நித்திய உலகம் ஆகியவற்றைக் குறித்த உத்தம கரிசனை பட்டணத்தின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாவிதமான மக்கள் மத்தியிலும் பரவியது. உலர்ந்த எலும்புகளின் மத்தியில் சத்தம் அதிகரித்தது. ஆவிக்குரிய மற்றும் நித்தியமானவற்றைக் குறித்தவைகளையன்றி வேறொன்றும் பேசப்படவில்லை.

மக்களின் உள்ளங்கள் உலகத்திலிருந்து அகற்றப்பட்டு பயனற்றதாக கருதப்பட்டது. அவர்களது ஒரே பார்வை, பரலோக ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வது என்பதால் அவர்கள் அதற்கு நேராக ஓடினார்கள்.

இந்தப் பெரிய கரிசனை மறைக்கக் கூடாததாயிருந்தது. அவர்கள் முகத்திலேயே அது மிகத் தெளிவாகத் தெரிந்தது. கிறிஸ்துவை விட்டு வெளியேறுவதால் நரகத்தில் விழுந்து விடும் அபாயம் பயமுறுத்தியது. எனவே மக்களின் மனது உயிருக்காகவும் வருங் கோபத்துக்காகவும் தப்பி ஓடுவதாயிருந்தது.

அனைவரும் ஆத்தும கரிசனையுடன் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி, இரகசியமாக வீடுகளில் ஜெபித்தனர். இதில் மக்கள் திரளாகக் கூடினர். ஏனெனில் அனைவரும் நித்தியத்தைக் குறித்த கரிசனையுடையவர்களாயிருந்தனர். மார்க்கத்தைக் குறித்து எண்ணமற்றவர் களாயிருந்தவர்கள், உயிர் மீட்சி பெற்றனர். மனமாற்றமடைந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் பெருகியது. பாவிகள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தனர்.

எங்கள் பொதுக் கூடுகைகள் அழகாயிருந்தன. சபை மக்கள் தேவ பணியில் உத்தமமும், ஆராதனையில் தீவிரமும், தேவ வசனத்தினை உட்கொள்ளுவதில் வாஞ்சையுமாயிருந்தனர். கூடுகையில் மக்கள் கண்ணீரோடு வசனத்தைக் கேட்டனர். சிலர் அழுகையோடும், துக்கத்தோடும் மற்றும் பாரத்தோடுமிருக்க, சிலர் மகிழ்வோடும், அன்போடும் கேட்க இன்னும் சிலர் அயலாரின் ஆத்துமாக்களுக்காக கரிசனையோடும் பரிதாபத்தோடும் கேட்டனர்.

மேலும் ஏற்கெனவே மனந்திரும்பிய நாங்கள் தேவ ஆவியின் புதியதும் அதிகப்படியானதுமான ஆவியால் உயிர்ப்பிக்கப்பட்டோம். தங்கள் ஆவிக்குரிய வாழ்வைக் குறித்து சந்தேகத்தால் தவித்தவர்கள் சந்தேகங்கள் நீங்கி, திருப்தியான அனுபவத்தையும் அதிகமான தெளிந்த தேவ அன்பையும் கண்டனர்.

தேவனுடைய அமைதலான, எளிய மகத்துவ பணி

மனிதன் பலத்த காரியங்களைச் செய்ய முற்படும் போது தனது ஆயுதங்களாலும் சத்துவத்தாலும் தடைகளை எதிர்க்க முடியும் என்று எண்ணிக் கொள்கிறான். அவன் வியர்வையோடும் தூளோடும் சத்தத்தோடும் அல்லாமல் பணி செய்யக் கூடாது.

ஆனால் தேவன் அதிசயமான காரியங்களைச் செய்யும் போது சுற்றிலும் அமைதலை அனுப்பி, மெல்லிய குரலுடன், பெலவீன பாண்டங்களை பயன்படுத்தி செய்து முடித்து விடுகிறார். மனிதன் மிகக் கடினமாக உழைத்தாலும் சிறிதளவே பயன் பெற முடியும். ஆனால் சிருஷ்டிகரோ அமைதியும் மகத்துவமுமான வல்லமையால் எந்த சந்தடியுமின்றி தடையின்றி ஒரு வார்த்தையால் சர்வ சக்தியுடன் முடிவற்ற அற்புதங்களைச் செய்கிறார்.

குளிர் காலத்திலிருந்து நல்ல துளிர்காலத்துக்குள் வர தேவன் தூதர்களை அனுப்பி, படிந்திருக்கும் பனிக் கட்டிகளை அகற்றுவதோ புதிய மலர்ச் செடிகளை நடுவதோ இல்லை. அவர் தமது வாயின் சூடான காற்றால் பனிக்கட்டிகளை உருகச் செய்து அமைதலாக செயல்படுகிறார். பனிக்கட்டி உருகி, பனி கரைந்து, ஆறுகள் உயிர் பெற்று மலர்கள் நறுமணம் வீசுகின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

அமைதியாக ஒரு அழகிய உலகம் எழும்பி, பழையவைகள் அகற்றப் படுகின்றன.

இதுவே தேவனுடைய செயல் பாட்டின் முறை. அது இயற்கையிலும் ஆவிக்குரிய உலகிலும் அமைதலும், எளிதும், மகத்துவமும் மற்றும் தடை படாததுமாகும். சீர்திருத்தமும், எழுப்பு தல்களும் பெந்தெகொஸ்தும் கல்வி யறிவற்ற வாலிபனால் அனேகருக்கு அளிக்கப்பட்டது.

ஜான் வெல்ஷ் என்ற ஜெப வீரனின் பெருமூச்சுகளால் Ayr என்ற சபையில் நடு இரவில் எழுப்புதல் ஏற்பட்டது. அது போல நாற்தாம்டனில் ஜோனதான் எட்வர்ட்ஸ் நகர மக்களுக் காக ஜெபித்த போது அந்த பரிசுத்த வானின் ஜெப அறையிலிருந்து ஜீவ வல்லமை வெளிப்பட்டு அற்புதங்கள் நடந்தன.

இரட்சிக்கக் கூடாதபடி கர்த்தரின் கரங்கள் குறுகிப் போகவுமில்லை, கேட்கக் கூடாதபடி அவரது செவி மந்தமாகவுமில்லை.

தேவன் உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கட்டும்

Let God Search your Heart

E.D. Hettinger

வேத வசனத்துக்குக் கீழ்ப் படிவதும், தூய ஆவியானவரால் கட்டுப் படுத்தப்படுவதும், ஜெபம், விசுவாசம் ஆகியவை நிறைந்த வாழ்வும், ஆத்தும ஆதாயமும், எழுப்புதலும் மிகவும் தேவையானவை. "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனா னால் கர்த்தர் என் ஜெபத்தைக் கேளார்" சங்.66:18.

கர்த்தர் மனிதரின் உள்ளான பகுதியைக் குறித்து அதிக அக்கரை யுடையவர். அவர் எல்லாப் பகுதி யையும் நன்கு அறிவார். எனவேதான் "இருதயத்தின் நிறைவால் வாய் பேசும்" என்று மத்.12:34 கூறுகிறது. மேலும் "எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித் தனங்களும், களவுகளும், பொய் சாட்சி களும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்" மத்.15:19.

அக்கிரம சிந்தை என்பது என்ன? அக்கிரமத்தை அங்கீகரிக்காமலிருப் பதற்குப் பதிலாக அங்கீகரிப்பதாகும். தவறு என்று அறிந்தும் அதை மறுக்கவும் விட்டு விடாமலிருப்பதுமாகும். "நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாம லிருப்பது பாவம்" யாக்.4:17.

தாக்குவதும் மற்றும் இரகசியமுமான பாவங்கள்

எபி.12:1-ல் "பாரமான யாவற்றை யும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு விசுவாசத் தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்". நம்மை நெருங்கி நிற்கிற பாவம் நமது பலவீன பகுதி. அது நம்மை அடிக்கிறது, தோற்கடிக்கிறது, கிரமமாக வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. ஒருவர் நெகிழ விடும் பாவமும் தேவனுக்குத் தெரியும். சாத்தான் தேவ பிள்ளைகளைக் குறித்து நன்றாக அறிந்து அவனது பலவீன பகுதி வழியாக வேகமாகப் பிரவேசித்து விடுவான்.

நம்மில் பலவீனங்கள் இருக் கிறதா? "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத் தக்கவன் யார்?" எரே.17:9. "கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்கு தலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர்" சங்.139:1-2. ".....உங்கள் மனதில் எழும்பு கிறதை நான் அறிவேன்" எசேக்.11:5.

தேவன் நமது இரகசிய பாவங் களை அறிவார். "இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர். என் பாவத் தின் மேலல்லவோ கவனமாயிருக்கிறீர்" யோபு. 14:16. நமது இரகசிய பாவங்களை சபை மக்களுக்கும், குடும்ப அங்கத் தினருக்கும் ஜெப பங்காளர்களுக்கும் மறைக்கலாம். பாவத்தை வெறுக்கும் தேவனிடம் மறைக்க முடியாது.

தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்

சங்.139:23-24 வசனங்களைப் படியுங்கள்.

அன்பானவர்களே, நாம் தேவ னோடு தனித்திருப்பதும் நமது இருதயங் களை அவர் பரிசோதிக்க அனுமதிப்பதும் அவசியம். சுத்தப்படுத்தப்பட வேண்டிய அவருக்கு திறந்தளிக்கும் போது இரக்கம் பெறுவோம். "தன் பாவங்களை மறைக் கிறவன் வாழ்வடைய மாட்டான், அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்" நீதி.28:13.

பல ஆண்டுகளுக்கு முன்பாக எனது சபையைச் சார்ந்த சிலர் எழுப்பு தலுக்காகவும், ஆத்துமாக்களின் இரட்சிப் புக்காகவும் கூடி ஜெபித்தனர். ஒரு நாள் அவர்களிலொருவர் திடீரென எழும்பி நின்று, "தேவனைத் தவிர வேறு யாரும் அறியாத பாவம் என்னில் இருப்பதால் தொடர்ந்து ஜெபிக்க முடியவில்லை" என்று கூறி விட்டு தன் பாவங்களைக் கர்த்தருக்கு முன்பாக அறிக்கையிட்டார். பின்பு தொடர்ந்து சந்தோஷத்தோடு அனைவரும் ஜெபித்தனர்.

அடுத்த நாள் கர்த்தருடைய நாளாக இருந்தது. அவரது மகனுக்காக அவர் ஜெபித்த ஜெபம் கேட்கப்பட்டு, அவனும் ஆண்டவரை ஏற்றுக் கொண் டான்.

அக்கிரமம் பிளவுகளை ஏற்படுத்துகிறது

"..... உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது" ஏசா.59:2.

கிறிஸ்தவனது வாழ்வில் பாவம் ஆண்டவராகிய இயேசுவில் நிலைத் திராமல் தடுக்கிறது. "நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள்.... என்னாலே யல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" யோவா.15:5.

அக்கிரமம் வல்லமையிலிருந்தும், கனிகொடுப்பதிலிருந்தும், ஜெபிப்பதி லிருந்தும், விசுவாசத்திலிருந்தும், அன்பி லிருந்தும், ஆவியில் நிலைத்திருப்பதி லிருந்தும், தேவ சித்தத்திலிருந்தும் நம்மைப் பிரிக்கிறது.

இருதயத்தின் அக்கிரமம் மந்தப்படுத்துகிறது

அக்கிரமம் காதுகளை மந்தப் படுத்துகிறது. "....நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால் அதை விளங்கப் பண்ணுகிறது அரிதாயிருக்கும்" எபி.5:11. காதுகள் மந்தப்படுவதால் ஏற்படும் விளைவுகளை 1 கொரி.3:1-3 வசனங்களில் படித்து அறியலாம். ஆவிக் குரியவர்களாக எண்ண முடியாமல், மாம்சத்துக்குரியவர்களாகவும் கிறிஸ்து வுக்குள் குழந்தைகளாகவும் எண்ண வேண்டியதாயிற்று. பெலனில்லாதபடி யால் பாலைக் கொடுத்தும் பெல னில்லை. மனுஷ மார்க்கமாய் நடக்கி றார்கள்.

பாவம் காதுகளை மந்தமாக்கு வதால் தூய ஆவியானவரின் சத்தத்தைக் கேட்க முடியாமல் குழந்தையாகவே வாழ்கிறோம். அக்கிரமம், புரிந்து கொள்ளும் தன்மையாகிய கண்களைக் குருடாக்குகிறது. இருதயத்திலிருந்து அன்பை அகற்றி விடுகிறது. விசுவாசியின் நடைக்குத் தடை போடுகிறது. மனித னுடைய பேச்சில் விஷம் கலக்கிறது. தேவனுடைய ஐக்கியத்திலிருந்து நம்மை விலக்குகிறது.

என் இருதயத்தின் அக்கிரமம் தேவனுடைய காதுகளை மந்தப்படுத்துகிறது

"என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்" சங்.66:18. "....அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவி கொடுப் பதில்லை என்றார்" எசேக்.8:18. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாத படிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" ஏசா. 59:2.

அக்கிரமத்தை இருதயத்தில் வைத்துக் கொண்டிருந்தால் ஆண்ட வராகிய இயேசுவோடு தொடர்பு

(8-ம் பக்கம் பார்க்க)

பெந்தெகொஸ்தேயை விடப் பெரிதான எழுப்புதலை நாம் பெறலாம்

We can have a revival greater than Pentecost

Hyman J. Appleman

அடித்துச் செல்லும் ஒரு மார்க்க விழிப்புணர்வு தேசத்தை தேவனிடம் திரும்பக் கொண்டு வர முடியும். பாவத்தின் கசப்பும், பிசாசுக்குரிய நரகத்துக்கேதுவான தீமைகளை வெளிப் படுத்தும் ஒரு விழிப்புணர்வு தேவை. இதைப் பெறுவது எப்படி?

சாமுவேல், எஸ்றா, எலியா, யோசபாத், ஊதர், நாக்ஸ், வெஸ்லி, மூடி போன்றவர்களின் காலம் போல பொது வான பாவ விடுதலை வேண்டும்.

மனந்திரும்புதலும் பாவ அறிக்கையுமில்லாது எந்த எழுப்புதலும் ஆரம்பித்ததில்லை. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் அதாவது நம்மில் தான் ஆரம்பிக்க வேண்டும். தேவனு டைய பிள்ளைகள் என்று சொல்லுகிற நாமே சரியாயிராவிட்டால் யாரை நாம் சரியாக்க முடியும்? "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவக்குங் காலமா யிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" *1 பேது.4:17.*

கடல் நீரளவு மன்றாட்டு ஜெப கண்ணீர்கள்

மோசே சிவந்த சமுத்திரத்தின் முன்பாகவும், யோசுவா எரிகோக் கோட்டையின் முன்பாகவும், எலியா கர்மேல் பர்வதத்தின் மேலும், இயேசு கெத்செமெனேயிலும், பவுலும் சீலாவும் பிலிப்பி சிறைச்சாலையிலும் இரக்க ஆசனத்தைப் பற்றிக் கொண்டு தேவன் பலத்த காரியங்களைச் செய்யும்படி வேதனையோடும் கண்ணீரோடும் மன்றாடினார்கள்.

நாம் தனியாகவும், குழுவாகவும், ஜெபக் கூடுகைகளிலும், தனி அறை யிலும் ஜெபிக்க வேண்டும். நமக்காகவும், ஒருவருக்கொருவருக்காகவும், கிறிஸ்தவ தலைவர்களுக்காகவும், பணியாளர் களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுத லோடும், விண்ணப்பத்தோடும் ஆவி யினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" *எபேசி.6:18.*

நாம் நமது சமுதாயங்களையும், பட்டணங்களையும், தேசத்தையும், உலகத்தையும் மன்றாட்டு கண்ணீரால் ஸ்நானப்படுத்த வேண்டும். நரகத்துக்கு நேராக விரைந்து செல்லும் மக்களுடைய இரட்சிப்புக்காக தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தினாலே விண்ணப்பம் செய்ய வேண்டும். ஆத்தும ஆதாயத்திற்காக எழுப்புதலை எதிர்பார்க்கவேண்டும். "சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது" *ஏசா.66:8.*

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும் பினால், அப்பொழுது பரலோகத்தி லிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்" *2 நாளா.7:14.*

இரு கிறிஸ்தவர்கள் சேர்ந்தால் செய்ய முடியும். "...உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தா கிலும் பூமியிலே ஒருமனப் பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறன்" *மத்.18:19.*

ஒரே பரிசுத்தவான் தேவனு டைய கிருபாசனத்தை கிட்டிச் சேர்ந்து ஜெபத்தில் போராடினால் வெற்றி பெற முடியும். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது" *யாக்.5:16.*

நாம் அனைவரும் நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, நம்மை மறுபடியும் அர்ப்பணம் செய்து, தேவனோடுள்ள ஜெப உடன்படிக்கை யையும் ஒருவரோடொருவர் ஜெபிப் பதையும் புதுப்பிப்போம். அப்போது பெந்தெகொஸ்தே நாளை விடப் பெரிதான எழுப்புதல் ஏற்படும். மனந் திரும்புதல் மூலமாகவும், அர்ப்பணிப்பு மூலமாகவும், விண்ணப்பத்தின் மூலமாக வும் பெந்தெகொஸ்தே மறுபடியும் நிகழ தேவன் கிருபை செய்வாராக. அது நமது வாழ்நாளில் நடைபெறுவதாக.

*****

எழுப்புதலுக்கான திறவுகோல்

The Key to Revival

Rich Carmicheal

தேவனுடைய ஜனங்களாகிய நாம் எழுப்புதலின் தேவையை உணர்ந்து அதை எதிர்பார்க்க வேண்டும். சிலர் இந்த சூழ்நிலை கொடியதாகவும் இன்னொரு விழிப்புணர்வு ஏற்பட காலம் குறைவாக இருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால் ஒரு இறுதி அருள் மாரியை அனுப்ப இவைகளே காரணங்கள் என்று நம்பலாம். கிறிஸ்து மறுபடியும் வருவ தற்கு முன்பாக அனேக இருதயங்களை விழிப்படையச் செய்ய அவர் விரும்பு கிறார். தேவன் தாம் செய்ய விரும்பும் பணியினை எந்த நிலையிலும் சிறிது காலத்திற்குள் செய்ய முடியும். அதற்கு *2 நாளா. 7:13-14* வசனங்களின்படி அவரது ஜனங்களாகிய நாம் நம்மைத் தாழ்த்தி, ஜெபித்து, அவர் முகத்தைத் தேடுவ தோடு நமது பொல்லாத வழிகளை விட்டுத் திரும்ப வேண்டும்.

1904-1905 ஆண்டுகளில் வேல்ஸில் நடந்த எழுப்புதலைப் பாருங்கள். எழுப்புதல் ஆரம்பிக்கும் முன்னால் தேசத்தின் ஆவிக்குரிய மற்றும் நல்லொழுக்க நெறி இருளடைந் திருந்தது. இதற்கிடையில் தேவ ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபத் தோடு தேவனுடைய முகத்தைத் தேடி தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பி னார்கள். அதன் விளைவாக தேவன் முதல் ஆறு மாதங்களிலேயே *100000* பேர் மனந்திரும்புவதற்கேதுவான எழுப்பு தலை ஊற்றினார். மட்டுமின்றி தேசத்தை சுற்றிலும் வெகுதூரம் வரைக்கும் ஆவிக்குரிய மற்றும் நல்லொழுக்க நிலை தாக்கமடைந்தது.

ஐக்கிய நாட்டில் *1857-1859* ஆண்டுகளில் நடைபெற்ற எழுப்புதலை சிந்தித்துப் பாருங்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய தெய்வீக மன்றாட்டு வீரர்கள் மூலமாகவே இது ஆரம்பித்தது. ஆனால் தேசம் முழுவதும் இரண்டு மில்லியனுக்கு அதிகமானோர் மன மாற்றமடைந்தனர்.

தேவன் நமது நாட்களில் இது போல் செய்ய முடியுமா? நிச்சயமாக அவரால் செய்ய முடியும். அவர் அப்படிச் செய்ய ஆசையுடையவராகவுமிருக் கிறார். ஆனால் தேவ ஜனமாகிய நாம் அவரை முழுமனதோடும் தனிப்பட்ட எழுப்புதலுக்காகவும், குழுவாக எழுப்பு தலுக்காகவும் நம்மை எழுப்புகிறோமா என்பதுதான் கேள்வி. எழுப்புதலின் திறவுகோலாக தேவன் தம்முடைய ஜனத்தை எதிர்பார்க்கிறார்.

துரதிருஷ்டவசமாக அனேகர் நமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள அரசியல்வாதிகளையும் நியாயஸ்தலங் களையும் நாடுகிறோம். இந்தச் சூழலில் நமது ஒரே நம்பிக்கை தூய ஆவியான வரின் மாரி பொழியப்படுவதே. வேல்ஸ் எழுப்புதலின் அமைப்பைப் பாருங்கள்: அரசியல் கூடுகைகள் கைவிடப்பட்டன; யாருமே அவற்றைக் குறித்து அக்கரை கொள்ளவில்லை. லண்டன் பார்லி மென்ட் கூடுகைகளை அரசியல் தலை வர்கள் ஒதுக்கி, எழுப்புதல் கூடுகைகளில் கலந்து கொண்டார்கள். எழுப்புதலுக்கு அரசியல் தலைவர்களின் தேவையில்லை, ஆனால் அரசியல் தலைவர்களுக்கு எழுப்புதல் தேவையாயிருந்தது.

எழுப்புதலுக்கான தேவைகள்

கடந்த காலங்களில் செய்யப் பட்ட பாவங்கள் அறிக்கை பண்ணப் படாமலிருக்கின்றனவா? உடனே முழங் காலில் நில்லுங்கள். உங்கள் கடந்த காலம் தள்ளிவிடப்பட்டு, நீங்கள் கழுகி சுத்தமாக்கப்பட வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

இது சரியா அல்லது தவறா என தீர்மானிக்கக்கூடாத ஏதேனும் சந்தேகங்கள் வாழ்க்கையிலிருந்தால் அதை அகற்றி விடுங்கள். உங்களுக்கும் தேவனுக்கு மிடையில் ஒரு சிறு மேகப் பகுதி இருக்கவே கூடாது. நீங்கள் எல்லாரையும் மன்னித்துவிட்டீர்களா? அப்படி மன்னிக்காவிட்டால் உங்கள் பாவங்களும் மன்னிக்கப்படமாட்டாது. *(மத்.6:12; மாற்.11:25-26)*

ஆவியானவருக்கு கீழ்ப்படியுங்கள். சரியானதும், உடனடியானதும், கேள்வி கேட்காததுமான கீழ்ப்படிதல் தேவை.

கிறிஸ்து உங்கள் இரட்சகர் என்று பகிரங்கமாக அறிக்கை செய்ய வேண்டும். சொல்லுவதற்கும் அறிக்கையிடுவதற்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது

வேல்ஸ் எழுப்புதலில் ஒரு தலைவராயிருந்த ஈவான் ராபர்ட்ஸ் என்பவர் மேற்கூறிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

உத்தம எழுப்புதலில் கிறிஸ்துவே கவனத்துக்குரியவர். எனவே நாம் முழு மனதோடு அவர் நாம மகிமைக்காக எழுப்புதலினை நாடுவோம்.

"நாம் தூய ஆவியானவரை இன்னும் அதிகமாகப் பெற வேண்டும் என்பதை விட, தூய ஆவியானவர் நம்மை இன்னும் அதிகமாக ஆட்கொள்வது தான் கேள்வி".

Oswald J. Smith

(6-ம் பக்க தொடர்ச்சி)

கொள்ள முடியாது. அவர் நமக்குப் பதிலும் தர முடியாது.

நிவாரணம்

முதலாவது கரிசனை கொள்ளுங்கள். *சங்.139:23-24; யோபு.13:23* ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

இரண்டாவது அறிக்கையிடுங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" *1 யோவா.1:9.*

தேவனுக்கு முன்பாகவும் மக்கள் முன்பாகவும் உத்தமமாயிருங்கள். தூய தேவனுக்கு முன்பாக இருதயத்தை ஆராய்வோம். அவர் என்ன சொல்லுகிறார் அதன்படி செய்யுங்கள். *யோவா.2:5*

"நமது இருதயங்களிலிருந்து பெருமை, சுயநலம், பேராசை போன்ற தேவனுக்குப் பிரியமற்ற தன்மைகள் வெளியேற்றப்படும் போது, தூய ஆவியானவர் உள்ளே பிரவேசித்து ஒவ்வொரு பகுதியையும் நிரப்பிடுவார் என்று நான் திட்டமாக விசுவாசிக்கிறேன். ஆனால் மாறாக இத்தீயபண்புகள் நிரம்பியிருந்தால் தேவ ஆவியானவருக்கு அங்கு இடமிருப்பதில்லை. ஆனாலும் அனேகர் இருதயத்தில் வெவ்வேறு காரியங்களை நிரப்பிக் கொண்டு, தேவனிடமும் தங்களைத் தூய ஆவியால் நிரப்பும்படி கேட்கின்றனர். தேவன் நம்மை நிரப்பும்படியாக ஜெபிப்பதற்கு முன்னால், அவர் நம்மை வெறுமையாக்கும்படி ஜெபிப்பது அவசியம்". - D.L. Moody

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **St. John's Church**
Malaikodi, Vellore . Mobile : 99440 21634, 63830 68158

நாள் : **11.03.2023,** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

தலைமை : **Rev. M. Andrew Annamalai** (Presbyter in Charge)

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்,** மொபைல் : 95432 21008

எழுப்புதலை மையமாகக் கொள்வோம்

keeping a revival focus

Lois J. Stucky (1928 - 2014)

இதை வாசிக்கிறவர்களில் சிலர் ஸ்தல சபையில் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறவராகவோ ஓரிருவர் இந்த பாரமும் காட்சியுமுடையவர்களாயுமிருக்கலாம். சகோ. மாக்லியோடு என்பவரை தேவன் கானடியன் எழுப்புதலில் வல்லமையாக பயன்படுத்தினார். அவர் 'நீங்கள் சரியான தடத்தில் இருக்கிறீர்கள் இதிலே நிலைத்திருங்கள்' என்பார். மற்றவர்களை உற்சாகப்படுத்துங்கள். விடாமுயற்சி தன் பலனைத் தரும். எழுப்புதல் எவ்வளவு அருகில் இருக்கிறது என்பதை நாம் அறியோம். ஆயத்தமாக தேவன் செய்வதெல்லாவற்றையும் நம்மால் காண முடியாது.

"....நீங்கள் தேடுகிற ஆண்டவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாக வருவார்" மல்கி. 3:1. சாதாரணமாக ஆரம்பிக்கும் ஒரு நாள் அசாதாரணமாக மாறிவிடும் என்பதை யார் அறிவார்? உத்தமமாயிருங்கள். தேவன் தலையிடுகிறார்.

கீழ்ப்படியுங்கள். கீழ்ப்படிதலின் ஒரு சிறு செயல் அறை நிரம்பும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் திறவுகோலாயிருக்கும். தேவன் விரும்பும் காரியங்களை நாம் செய்ய நாம் உணர்வுள்ளவர்களாயிருக்க அவர் உதவி செய்வாராக. இதனால் தான் சகோ. மூர் அவர்கள் அடிக்கடி, "தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் சிறிய காரியங்கள் இந்த உலகில் நாம் செய்யும் எதையும் விட மிக முக்கியமானது" என்று கூறுவார். அவரது மெல்லிய குரலுக்குக் கருத்தாக செவி கொடுப்போம். தூய ஆவியானவர் அப்போது நம்மை எழுப்புதலுக்கு நேராக வழி நடத்துவார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை மையமாகக் கொள்வோம். அவரது வார்த்தைகள் நம்பிக்கையும் விசுவாசத்தைக் கட்டி எழுப்புகிறவைகளுமாகும். நாம் உத்தமமான தேவனை சேவிக்கிறோம். அவரது உடன்படிக்கைகளில் அவர் உண்மையுள்ளவர். *2 நாளா. 7:14*ஐப் படிப்போம். நாம் கீழ்ப்படிந்தால் தேசத்தில் ஷேமம். பாவம் விலக்கப்பட வேண்டும். தேவன் நம்மை மன்னித்து நமது ஆதியிலிருந்த அன்பை மறுபடியும் தந்து நம்மைப் புதுப்பிப்பாராக.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

வேல்ஸ் எழுப்புதலுக்குக் காரணமானவர் ஈவான் ராபர்ட்ஸ் அல்ல, தூய ஆவியானவர் மட்டுமே.

ஆவியானவரின் பணி தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிக் கொண்டிருந்த போது ஈவான் ராபர்ட்ஸின் ஊழியம் ஒரு சிறுபகுதியில் நிறைவேறிக் கொண்டிருந்தது.

ஊழியஞ் செய்கிறவர்கள் மையமாகக் கருதப்பட்டால் அந்தப் பணி தேவ பணியல்ல அது மாம்சத்துக்குரியது.

இந்த எழுப்புதலில் எந்த இயக்கத்தின் ஒழுங்குகளோ, எழுப்புதலாளர்களோ இல்லை. ஜெபக்கூடுகை களின் மத்தியில் எந்த இணைப்பும் இருக்கவில்லை. ஃபின்னியைத் தவிர எந்த எழுப்புதல் ஊழியக்காரரும் புதிய இங்கிலாந்து பகுதியில் இருக்கவில்லை. அது மனிதரால் திட்டமிடப்படவோ வழி நடத்தப்படவோ இல்லை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason